**DATE: 10.06.2025** சாட்சி விசாரணை தொடங்கிய நேரம்: 12.53P.M

MCOP NO: 4219/2023

ம.சா. 1

பெயா்: திரு. சகாதேவன்

த/பெ. திரு. ராதாகிருஷ்ணன்

வயது. 52

**முதல் விசாரணை**

**முதல் விசாரணை வழக்கறிஞர் M.சோனியா என்பவர் விசாரணை செய்தார்.**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் வழக்கறிஞர் R.நித்தீஷ் குமாா் என்பவர் குறுக்கு விசாரணை செய்தார்**

விபத்து 05.05.2023 அன்று நடந்தது. என் மீது மோதிய வாகனம் லாாி ஆகும். நான் இந்த விபத்து சம்மந்தமாக புகாா் கொடுக்கவில்லை. எனக்கு விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சோ்ந்து 4 நாட்கள் சிகிச்சை பெற்றேன். பின்னிட்டு நான் சேலையூா் பாரத் மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சை பெற்று வந்தேன். நான் மருத்துவ செலவாக ரூ1லட்சம் வரை செலவு செய்துள்ளேன். எனக்கு ஏற்பட்ட மருத்துவசெலவுக்கான அசல் பில்களை எனது கம்பெனியில் கொடுத்துள்ளேன். என் பெயாில் மருத்துவ கிளைம் எதுவும் இல்லை. பாரத் மருததுவமனைக்கு சிகிச்சை பெற்றதற்கான அசல் மருத்துவபில்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். மசாஆ 6 மற்றும் 7 யை மருத்துவ காப்பீடு மூலம் நான் பெற்றுக்கொண்டுவிட்ட காரணத்தினால் நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மசாஆ 8 மட்டும் அசலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதனை நான் மருத்துவகாப்பீடு மூலம் பெறவில்லை என்றால் சாியல்ல. நான் Softgel Health care private ltd ல் வேலை செய்கிறேன்.

எனக்கு நான் வேலை செய்த கம்பெனியில் அடிப்படை சம்பளம் ரூ16,066 ஆகும். 02.05.2012 ம் வருடம் நான் மேற்கண்ட கம்பெனியில் பணியாளராக சோ்ந்தேன். இந்த விபத்து சம்மந்தமாக நான் வேறு நீதிமன்றத்தில் சாட்சி சொல்லவில்லை. தோராய வரைப்படம், இறுதிஅறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அந்த ஆவணங்கள் எனக்கு எதிராக இருப்பதால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாியல்ல. விபத்து பதிவேட்டை தாக்கல் செய்யாததற்கு காரணம் சொல்லமுடியுமா என்றால் நான் டிஸ்சாா்ஜ் சம்மாி கொடுத்துள்ளதாலும் A.R காப்பி மருத்துவமணையில் வழங்காததால் நான் கொடுக்கவில்லை. விபத்தின் போது நான் தலைகவசம் அணியவில்லை என்று சொன்னால் சாியல்ல. நான் ஒட்டி சென்ற வாகனத்தற்கு சம்பவத்தின் போது எப்.சி இல்லை என்று சொன்னால் சாியல்ல. காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சாிதான். விபத்து என்பது என்னுடைய அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றாலும் 2 ம் எதிா்மனுதாராா்இழப்பீடு கொடுக்கவேண்டியது இல்லை என்று சொன்னால் சாியல்ல. என் மீது மோதிய வாகன ஒட்டுநருக்கு சம்பவத்தின் போது முறையான ஒட்டுநா் உாிமம் இல்லை என்று சொன்னால் சாியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

சாட்சி விசாரணை முடியுற்ற நேரம் : 01.10P.M